---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக தேயிலை சக்தி நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தினால் தேயிலை சிறு உடமையாளர்கள் அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 74,048,541 தொகையினை திறைசேரியின் ஒத்திசைவுடன் பதிவழிப்புச் செய்வதற்கு தேயிலை சிறு உடமையாளர்கள் அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருந்தது. நிதியத்தினால் இத் தொகை பின்னோக்கிய சீராக்கம் செய்யப்படுவதற்குப் பதிலாக ஏனைய வருமானத்தின் கீழ் முன்கொண்டுவரப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான இலாபம் அத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 1998 முதல் 2002 ஆம் ஆண்டு வரையும் 2004 ஆம் ஆண்டிலும் மூலதனப் பங்களிப்பாக திறைசேரியினால் தேயிலை சக்தி நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 437,505,030 தொகையினை பொருத்தமான தாக்கங்களுடன் சீராக்குவதற்குப் பதிலாக, இத்தொகையினை எதிர்வரும் 10 ஆண்டுகளில் பதிவழிப்பதற்கான பணிப்பாளர்கள் சபையின் தீர்மானத்தின் பிரகாரம், அதில் ரூபா 43,750,503 தொகை மீளாய்வாண்டின் ஏனைய வருமானத்தின் கீழ் எடுத்துவரப்பட்டிருந்தமையால், ஆண்டிற்கான இலாபம் அத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) எதிர்வரும் ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 72,500 குத்தகை வாடகை மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எடுத்து வரப்பட்டிருந்தது.

(ஈ) கிளிமலை தொழிற்சாலையினை குத்தகைக்கு வழங்கும் முன்னர் சாதாரண இயங்கும் நிலைக்கு கிளிமலை தொழிற்சாலையின் நிற வேறாக்கல்

இயந்திரத்தினை மீளமைப்பதற்கு நிதியம் இணங்கியிருந்த போதிலும், அது செய்யப்படாதிருந்ததுடன் குத்தகைதாரரால் மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்தத்திற்காக ஏற்பட்டிருந்த ரூபா 250,834 கிரயம் கணக்குகளில் பொறுப்பாக உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும், திருத்தப்பட்ட நிற வேறாக்கல் இயந்திரத்தின் பெறுமதி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதலீட்டு ஆதனங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 1,717,612 பெறுமதியான டபிள்யூடபிள்யூபி உறைகள் இருப்பு தேயிலை இருப்புக்களின் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 971,531 பெறுமதியான பயன்படுத்த முடியாத பொலித்தின் இருப்பு எழுதுகருவி இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஊ) நிதிக்கூற்றுக்களில் ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக ரூபா 9,700,079 வங்கி மேலதிகப்பற்று காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மீதியினை ஆதாரப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. கணக்காய்வுப் பரிசோதனைகளின் படி இக் கணக்கு மூடப்பட்ட கணக்கொன்றாக அவதானிக்கப்பட்டதுடன் மீதியினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கிணக்கம் செய்யப்படாத மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கி உறுதிப்படுத்தலுடன் பல ஆண்டுகளாக முன்னெடுத்து வரப்பட்டிருந்த செயற்படாத மூன்று வங்கிக் கணக்கு மீதிகளின் கணக்கிணக்கம் ரூபா 1,201,619 வேறுபாட்டை வெளிக்காட்டியது.

(ஆ) கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், கைக் கணிப்பீட்டு முறையில் பராமரிக்கப்பட்ட காசுப் புத்தக மீதியின் அடிப்படையில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. இரண்டு முறைமைகளினதும் கீழுள்ள காசுப்புத்தக மீதிகளிற்கிடையே ரூபா 16,801,672 வேறுபாடு வெளிக்காட்டப்பட்டது. அதன் காரணமாக, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த வங்கி மீதிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயம் | பெறுமதி | கிடைக்கப்பெறாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| **வங்கிக் கணக்கு** | | |
| தொழிற்சாலை முகாமைத்துவ பிரிவு | 875,864 | வங்கி மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |
| **பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள்** | | |
| பெறவேண்டிய மீதிகள் | 241,447,793 | விபரமான தகவல்கள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் |
| செலுத்த வேண்டிய மீதிகள் | 205,106,116 | |
| முற்பண மீதிகள் | 38,078,755 | |
| வைப்பு மீதிகள் | 5,053,841 | |

### 1.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 மே 17 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் குத்தகை அடிப்படையில் கிளிமலை தேயிலை தொழிற்சாலையினை தேயிலை சிறுநில உடமையாளர்கள் அபிவிருத்தி சங்கத்திற்கு உரிமை மாற்றுகையில் காணப்பட்ட ரூபா 6,209,334 நடைமுறைச் சொத்து மற்றும் ரூபா 5,034,324 நடைமுறைப் பொறுப்பு மீதிகள் தீர்வுசெய்யப்படாது தொடர்ந்தும் கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

(ஆ) 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளிற்காக கொழும்பு தேயிலைத் தரகர் கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 19,744,732 தொகை கணக்காய்வுத் திகதியான 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதியளவிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பல ஆண்டுகளாக அறவிடப்படாதுள்ள கட்டிட நிர்மாணத்திற்கான ரூபா 28,311,753 முற்பணங்கள் கணக்காய்வுத் திகதியான 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதியளவிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) குத்தகை அடிப்படையில் பராமரித்து வரப்பட்ட பன்சல்தென்ன தேயிலை தொழிற்சாலை மீண்டெழும் நட்டங்கள் காரணமாக 2012 பெப்ரவரி 19 ஆந் திகதி குத்தகை கம்பனியொன்றுக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும், அத்திகதியில் உள்ளவாறான பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக, அத்திகதியிலுள்ளவாறான ரூபா 3,387,202 தொகையான பெறவேண்டிய மீதிகள் மற்றும் ரூபா 7,956,886 தொகையான செலுத்த வேண்டிய மீதிகள் கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டிருந்தன. தொழிற்சாலைக்கு மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை மின்சார சபையில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 258,491 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், 2011 ஆகஸ்ட் முதல் உற்பத்தி வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்த பலாங்கொடை தேயிலை தொழிற்சாலையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 3,829,720 தொகையான் பெறவேண்டிய மற்றும் ரூபா 2,176,440 தொகையான செலுத்த வேண்டிய அவ்வாறான மீதிகள் கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டிருந்தன. ஹினிதும தேயிலை தொழிற்சாலை மீளாய்வாண்டின் இறுதியளவில் வரையறுக்கப்பட்ட கழுபோவிடியன தேயிலை தொழிற்சாலை கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 1,288,937 தொகையான அறவிடப்பட வேண்டிய மற்றும் ரூபா 1,155,726 தொகையான செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பெறவேண்டிய மீதிகளாக முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 7,521,752 தொகை நீண்ட காலமாக செலுத்த வேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அக் கணக்குகளை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

---

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2000 இன் 47 ஆம் இலக்க தேயிலை சக்தி அதிகாரச்சட்டம் | |
| i. 3 ஆம் பிரிவின் 2(iii) ஆம் பந்தி | தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதிப் பொது முகாமையாளர் பணிப்பாளர் சபையின் முழுநேர அங்கத்தவர் ஒருவராக நியமிக்கப்பட சட்டம் வேண்டிய போதிலும், அதிகாரசபையில் அவ்வாறான பதவியொன்று காணப்படாமையால் அவ்விடத்திற்கு நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| ii. 3 ஆம் பிரிவின் 2(v) ஆம் பந்தி | பெருந்தோட்டக் கைத்தொழில் என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அமைச்சின் பிரதிநியொருவரை நியமிக்க வேண்டிய போதிலும், அமைச்சின் மதியுரைஞர் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் ஒருவராக நியமிக்கப்பட்டிருந்தார். அத்துடன், அமைச்சின் உத்தியோகத்தார் ஒருவர் அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தும் அவதானிப்பாளராக நியமிக்கப்பட்டு படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| i. நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | முற்பணங்களை வழங்குவதற்காக குறித்துரைத்த எல்லை நிச்சயிக்கப்பட்டிருக்கவில்லை. 08 சந்தர்ப்பங்களில் ரூபா 20,000 முதல் ரூபா 155,000 வரையான வீச்சில் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | ii. நிதிப்பிரமாணம் 371(2)(இ) | குறித்துரைத்த நோக்கங்களிற்காக மாத்திரமே உத்தியோகத்தர்களிற்கு முற்பணங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், 2 உத்தியோகத்தர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 58,250 முற்பணங்கள் நோக்கங்களிற்கு பயன்படுத்தாமலும் உடனடியாக தீர்க்காமலும் குறிப்பிடத்தக்க காலம் கையில் வைத்திருக்கப்பட்டிருந்தது. |
| | iii. நிதிப்பிரமாணம் 395 (இ) | நிதியத்தின் 04 வங்கிக் கணக்குகளிற்காக வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | iv. நிதிப்பிரமாணம் 396 | வழங்கப்பட்ட போதிலும் 06 மாதங்களிற்கு மேலாக கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 96,497 பெறுமதியான காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை<br>6:5:1 ஆம் பந்தி | (i) நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களிற்குள் 2012 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 18 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.<br>(ii) சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2012 ஆம் ஆண்டிற்கான வரைபு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | மோட்டார் வாகனங்களிற்கான எரிபொருள் நுகர்வுச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு பரிசோதிக்கப் பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்தான ஒட்டுமொத்த நிதி விளைவுகள் ரூபா 82,199,299 தேறிய இலாபமொன்றானதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டில் ரூபா 85,696,151 தேறிய நட்டமொன்றானமையால் நிதி விளைவுகளில் ரூபா 167,895,450 அல்லது 195.92 சதவீத முன்னேற்றத்தைக் காட்டியது. கொடுப்பனவை கைவிடுவதற்கு இருதரப்பும் இணங்கியமையால் தேயிலை சிறு உடமையார்கள் அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தவேண்டிய ரூபா 74,048,541 வருமானத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தமை, 1998 முதல் 2002 வரையான காலத்தில் கிடைத்திருந்த ரூபா 437,505,030 அரசாங்க மானியத்தைக் காட்டிலும் ரூபா 43,750,503 மானியம் மேலதிகமாக கிடைத்திருந்தமை மற்றும் இலாபத்திற்கு செலுத்தப்படாத சில்லறை கடன்பட்டோரிற்காக ரூபா 6,878,128 ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டமை இந்த முன்னேற்றத்துக்கு பிரதான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

#### (அ) தொழிற்சாலைப் பரிவு

2012 ஆம் ஆண்டிற்கான தொழிற்சாலைகளின் இலாப நட்டக் கணக்குகளின் படி, நிதியத்தின் ஒட்டு மொத்த தொழிற்சாலை நட்டங்கள் (தலைமை அலுவலக செலவினம் உள்ளடங்கலாக) முன்னைய ஆண்டின் ரூபா 73.600 மில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 57.695 மில்லினாக காணப்பட்டு ரூபா 15.905 மில்லியன் பெறுமதியால் அல்லது 21.6 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டிற்கான கள வருமானம் ரூபா 1.824 மில்லியனால் அல்லது 31.6 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை மற்றும் தொழிற்சாலை மொத்த இலாபம் ரூபா 16.091 மில்லியனால் அல்லது 24.9 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை என்பன காரணங்களாக காணப்பட்டன.

2008 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை ஒவ்வொரு தொழிற்சாலையினதும் இலாபம்/ நட்டங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**இலாப நட்ட நிலை**

| **தொழிற்சாலை** | 2012 | 2011 | ரூபா 000<br>2010 | 2009 | 2008 |
|---|---|---|---|---|---|
| தெனியாய | (7,349) | (4,126) | 1,054 | 7,913 | 6,709 |
| வலகந்துவ | (2,297) | (3,312) | 558 | 1,436 | 1,940 |
| மாவரல | (6,108) | (3,653) | 158 | (801) | (1,946) |
| எல்பிடிய | (7,990) | (16,604) | (10,105) | (8,994) | (13,298) |
| ஹினிதும | (3,792) | (14,712) | (13,223) | (6,636) | (10,015) |
| பலங்கொடை | (8,527) | (10,316) | (3,821) | (8,157) | (4,813) |
| கிளிமலை | (1,991) | (3,593) | (3,148) | (3,671) | (8,645) |
| பன்சல்தென்ன | (2,713) | (7,943) | (7,010) | (5,725) | (11,015) |
| ரைகம் கோரலை | (7,579) | 2,191 | 7,670 | 16,977 | 10,712 |
| கொத்மலை | (6,132) | (8,901) | (11,348) | (6,120) | (7,430) |
| கெப்பிட்டிபொல | (1,285) | (5,223) | 1,239 | 10,046 | (4,199) |
| பசறை | 6,640 | 2,345 | 6,342 | 17,162 | (1,032) |
| மஹாவலி | (899) | 245 | (2,738) | 2,345 | 3,265 |
| தெரணியகல | (3,989)* | - | - | - | - |
| யடிநுவர | (3,684)* | - | - | - | - |
| மொத்தம் | (57,695) | (73,602) | (34,372) | 15,775 | (39,767) |

* இத் தொழிற்சாலைகள் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதியத்தின் மேற்குறித்த 15 தொழிற்சாலைகளில் 5 தொழிற்சாலைகள் தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் நட்டத்தினை ஈட்டியிருந்ததுடன் பசறை தொழிற்சாலையினைத் தவிர்த்து ஏனைய சகல தொழிற்சாலைகளும் மீளாய்வாண்டில் நட்டத்தினை ஈட்டியிருந்தன.

(ii) 2008 முதல் 2012 வரையான ஆண்டுகளிற்கான கூட்டிணைந்த திட்டத்தின் படி, மீளாய்வாண்டின் இறுதியளவில் புலத்கொஹுபிடிய தொழிற்சாலைகளிலிருந்து முறையே ரூபா 1.125 மில்லியன் இலாபங்கள் எதிர்பாக்கப்பட்டிருந்த போதிலும், அத்தொழிற்சாலைகளில் உற்பத்தி வேலைகள் 2014 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஹினிதும, பலங்கொடை, கிளிமலை மற்றும் பன்சல்தென்ன தொழிற்சாலைகளின் உற்பத்தி நடவடிக்கைகள் நட்டம் ஈட்டப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டில் நிறுத்தப்பட்டிருந்தன. இருந்தபோதிலும் ஹினிதும தொழிற்சாலையின் முகாமைத்துவம் 2012 மே இலிருந்து இலாபத்தில் 1/3 இனைப் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் களுபோவிடியன தேயிலை தொழிற்சாலை கம்பனிக்கு மாற்றப்பட்டிருந்தது. கிளிமலை தொழிற்சாலை தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபைக்கு வருடாந்த குத்தகை அடிப்படையில் மாற்றப்பட்டிருந்ததுடன் பன்சல்தென்ன தேயிலை தொழிற்சாலை குத்தகைதாரர் ஒருவரிற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(iv) பலாங்கொடை மற்றும் பன்சல்தென்ன தொழிற்சாலைகளின் உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்த போதிலும், ரூபா 272,292 வருகை ஊக்குவிப்புக்களை உள்ளடக்கிய ரூபா 7,916,717 செலவினம், ரூபா 1,527,238 தொகையான வங்கி மேலதிகப்பற்று வட்டி, ரூபா 147,876 தொகையான வீட்டு வாடகை மற்றும் ரூபா 5,583,190 ஊழியர் இழப்பீடு என்பன மீளாய்வாண்டில் செலவிடப்பட்டன.

(ஆ) தேயிலை உற்பத்தி

--------------------------------

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கணக்காய்வில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் படி கடந்த 5 ஆண்டுகளில் ஒவ்வொரு தொழிற்சாலைகளினதும் தேயிலை உற்பத்தி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தொழிற்சாலை | தேயிலை உற்பத்தி (கிலோகிராமில்) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 |
| தெனியாய | 218,364 | 269,055 | 310,725 | 320,422 | 362,019 |
| வலகந்துவ | 241,296 | 260,930 | 257,830 | 215,419 | 328,902 |
| மாவரல | 111,197 | 171,257 | 175,756 | 135,765 | 170,915 |
| எல்பிடிய | 118,400 | 148,022 | 178,077 | 178,521 | 305,722 |
| ஹினிதும | - | 106,607 | 197,829 | 86,080 | 117,190 |
| பலாங்கொடை | - | 74,290 | 189,991 | 30,799 | 236,181 |
| கிளிமலை | - | - | - | 253 | 103,656 |
| பன்சல்தென்ன | - | 104,900 | 89,478 | 89,759 | 237,718 |
| ரைகம் கோரலை | 300,603 | 400,380 | 348,710 | 373,228 | 415,690 |
| கொத்மலை | 99,199 | 200,027 | 103,042 | 170,888 | 306,975 |
| கெப்பிட்டிபொல | 261,056 | 243,507 | 273,322 | 266,069 | 335,648 |
| பசறை | 290,487 | 307,929 | 328,441 | 364,673 | 417,012 |
| மஹாவலி | 351,989 | 458,806 | 301,755 | 381,466 | 749,879 |
| தெரணியகல | 40,599 | - | - | - | - |
| மொத்தம் | 2,033,191 | 2,745,710 | 2,754,956 | 2,613,341 | 4,087,507 |

(ii) கெப்பிடிபொல தொழிற்சாலையினைத் தவிர்ந்த ஏனைய சகல தொழிற்சாலைகளிலும் தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒட்டுமொத்த தொழிற்சாலைகளின் உற்பத்தி 26 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. தெனியாய, எல்பிடிய மற்றும் பசறை தொழிற்சாலைகளின் உற்பத்தி 2008 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் தொடர்ச்சியாக குறைவடைந்திருந்தது.

(iii) தொழிற்சாலைகளினால் உழைக்கப்பட்ட இலாபங்களை அதிகரிப்பதன் ஊடாக நோக்கங்களை அடைந்து கொள்ளும் விதத்தில் தொழிற்சாலைப் பிரிவினை வழிநடாத்துவதற்கு நிதியம் தவறியிருந்தது. மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கையின் படி, மீளாய்வாண்டிற்கான உற்பத்தி தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| தொழிற்சாலை | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி இலக்கிடப்பட்ட தேயிலை உற்பத்தி | உள்ளபடியான தேயிலை உற்பத்தி | முரண் | இயந்திர இயலளவு | இயந்திரப் பயன்பாடு | குறைப் பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | கி.கி | கி.கி | % | கி.கி | கி.கி | கி.கி |
| தெனியாய | 379,260 | 218,364 | (42.4) | 2,352,000 | 1,074,155 | 54.3 |
| வலகந்துவ | 731,430 | 241,296 | (67.0) | 4,536,000 | 1,168,658 | 74.2 |
| மாவரல | 433,440 | 111,197 | (74.3) | 2,688,000 | 537,241 | 80.0 |
| எல்பிடிய | 595,980 | 118,400 | (80.1) | 3,696,000 | 558,006 | 85.0 |
| ரைகம் கோரலை | 595,980 | 300,603 | (49.6) | 3,696,000 | 1,446,959 | 61.0 |
| தெரணியகல | 296,932 | 40,599 | (86.3) | 1,800,000 | 192,832 | 89.2 |
| கொத்மலை | 379,260 | 99,199 | (73.8) | 2,252,000 | 442,018 | 80.3 |
| கெப்பிடிபொல | 541,800 | 261,056 | (51.8) | 3,360,000 | 1,204,787 | 64.1 |
| மஹாவலி | 650,160 | 351,989 | (45.9) | 4,032,000 | 1,601,808 | 60.2 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் உள்ளபடியான தேயிலை உற்பத்தி மிகக் குறைவான மட்டத்தில் காணப்பட்டதுடன் அதன் மீதான முரண் வீச்செல்லை 42 சதவீதத்திற்கும் 86 சதவீதத்திற்கும் இடையில் காணப்பட்டது.

(ஆ) மேற்படி தகவல்களின் படி, தொழிற்சாலை ஒட்டுமொத்த முறைமையின் இயந்திர இயலளவு பயன்படுத்தப்படாத நிலையில் காணப்பட்டதுடன் சில தொழிற்சாலைகளில் அது ஏறத்தாழ 90 சதவீதத்தில் காணப்பட்டது.

**(இ) உள்நாட்டு தேயிலை விற்பனைப் பிரிவு**

---

உள்நாட்டு தேயிலை விற்பனைப் பிரிவு மீளாய்வாண்டின் இறுதியளவில் இலாபத்தை ஈட்டுவதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும், அது கடந்த 6 ஆண்டுகளில் நட்டத்தை ஈட்டியிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை ஈட்டியிருந்த திரண்ட நட்டம் ரூபா 15.84 மில்லியனாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 0.95 மில்லியனால் அல்லது 105 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

**(ஈ) பசளைகள் பிரிவு**

---

பசளைகள் பிரிவின் இலாப நட்டக் கணக்கின் படி, ரூபா 13.93 மில்லியன் இலாபம் ஈட்டப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 5.72 மில்லியன் அல்லது 29 சதவீத குறைவைக் காண்பித்தது. அத்துடன் பசளைகளின் விற்பனை வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 42.76 மில்லியன் அல்லது 46 சதவீத குறைவைக் காண்பித்தது.

**(உ) நலனோம்பல் பிரிவு**

---

மீளாய்வாண்டில் காப்புறுதி பிரதிநலனாக ரூபா 16,177,732 தொகை 745 நலனாளிகளிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டிருந்த 66 அங்கத்தவர்கள் உள்ளடங்கலாக மீளாய்வாண்டின் இறுதியளவில் உள்ளவாறு காப்புறுதி நலத்திட்டத்தில் காணப்பட்ட மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 140,368 ஆகும்.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) காசும் வங்கியும்

(i) தேயிலை சக்தி தொழிற்சாலைகளின் நிதித் தேவைகளை சமாளிப்பதற்கு தேயிலை சிற்றுடமையாளர் சங்கத்திடமிருந்து 2000 – 2003 வரையான காலத்தில் ரூபா 118.3 மில்லியன் கிடைத்திருந்த போதிலும், அக் கடன்களை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தொழிற்சாலைகள் தீர்த்திருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியளவில் 4 தொழிற்சாலைகள் மூடிவிடப்பட்டிருந்த போதிலும், அத் தொழிற்சாலைகளிற்கு வழங்கிய கடன்களை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் தொடக்கத்தில் நிதியத்தின் வங்கிக் கணக்கில் ரூபா 16,205 மில்லியன் மீதி காணப்பட்ட போதிலும், 2009 இலிருந்து ரூபா 58,186 மீதியினையும் கடந்த 5 ஆண்டுகளிற்கும் மேலாக ரூபா 223,447 மீதியினையும் கொண்டுள்ள இரண்டு வங்கிக் கணக்குகள் செயற்படாதிருந்ததன. இது தொடர்பில் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 83.44 மில்லியன் பெறுமதியான நிலையான வைப்புக்கள் காணப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் நிதியத்தினால் வங்கியிலிருந்து பெறப்பட்ட மேலதிகப் பற்றுக்காக ரூபா 8.49 மில்லியன் வட்டி செலுத்தப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது ரூபா 4.17 மில்லியன் அதிகரிப்பாகும்.

### (ஆ) காணிகள் மற்றும் கட்டிடங்கள்

(i) நிதியம் தாபிக்கப்பட்டதிலிருந்து காணப்பட்டு வருகின்ற எல்பிடிய, ஹினிதும, மற்றும் ரைகம்கோரலை தொழிற்சாலைக் கட்டிடங்கள் மற்றும் ஹொரணை பசளை களஞ்சியங்கள் ஆகியவற்றின் கிரயம் கணக்குகளில் ரூபா 62,391,999 எனக் காண்பிக்கப்பட்டுள்ள போதிலும், அக் கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகளின் பெறுமதி கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. அக் காணிகளின் உரித்தினை நிதியத்தின்

சுவீகரிப்பதற்கு 2014 நவம்பர் 30 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதியத்தின் தலைமை அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து 50 ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் ரூபா 28 மில்லியன் பெறுமதியான 40 பேர்ச் விஸ்தீரணம் கொண்ட காணியினை பெற்றுக்கொள்வதற்கு நிதியம் இணங்கியிருந்ததுடன் 2010 மார்ச் 31 ஆந் திகதி முற்பணமாக அதிகாரசபைக்கு ரூபா 8,082,256 தொகை முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும், மீளாய்வாண்டில் பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கமைய, அக் கட்டிடத்தினை வேறோர் இடத்தில் நிர்மாணிப்பதற்கு பிரேரிக்கப்பட்டிருந்தது. நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்த முற்பணம் 2014 நவம்பர் 30 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) வருடாந்த குத்தகை அடிப்படையில் மாற்றப்பட்டிருந்த ஹினிதும மற்றும் கிளிமலை தொழிற்சாலை சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) பன்சல்தென்ன தொழிற்சாலையின் குத்தகையினை நிதியத்தினால் கையேற்பதற்கு 2002 செப்தெம்பர் 18 ஆந் திகதி இரு தரப்புக்குமிடையே உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், குத்தகை உடன்படிக்கை தொழிற்சாலை கையளிக்கப்பட்டதிலிருந்து இது வரை (2012 பெப்ரவரி 19) பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. நிதியம் மீளாய்வாண்டில் ரூபா 7,664,603 தொகையினை புதுப்பில்களிற்காக செலவிட்டிருந்தமையை தொடர்புடைய கோவைகள் காண்பித்திருந்த போதிலும், அச் செலவினத்தை அறவிடும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, அவ்வாறான செலவினம் நிறுவனத்தினால் ஏற்படுத்தப்பட்ட நட்டமாக அவதானிக்கப்பட்டது.

(v) 2011 ஆகஸ்ட் முதல் உற்பத்தி நடவடிக்கைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த பலங்கொடை தேயிலை சக்தி தொழிற்சாலையின் அதிக எண்ணிக்கையான சொத்துக்கள் தெரணியகல தொழிற்சாலைக்கும் ஏனைய சில சொத்துக்கள் மற்றைய தொழிற்சாலைகளிற்கும் மாற்றப்பட்டிருந்த போதிலும், டிரக்டர், ரைலர், 4,722 மறுக்கப்பட்ட தேயிலை பக்கற்றுக்கள், பொதியிடப்பட்ட ஓபிஜ

தேயிலை இருப்பு, தேயிலை பறித்தல் மறைப்புக்கள், மறுக்கப்பட்ட தேயிலையின் பாரிய இருப்பு, இயந்திரங்கள், கழற்றப்பட்ட உதிரிப் பாகங்கள் மற்றும் பல ஆண்டுகளாக காணப்பட்டு வருகின்ற பசளை இருப்பு என்பன பயன்பாட்டுக்கு எடுக்கப்படாது தொழிற்சாலை வளவில் அழிவுறும் நிலையில் வைக்கப்பட்டிருந்தது.

(vi) பலாங்கொட தேயிலை தொழிற்சாலையின் ஆதனங்களில் பெரும் பகுதி முகாமைத்துவ மேற்பார்வையின் குறைபாடுகள் காரணமாக தொழிற்சாலை மூடப்பட்டதன் பின்னர் அதிகாரமற்ற ஆட்களால் பிடித்துக்கொள்ளப்பட்டு நிரந்தர கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் தொடரப்பட்ட வழக்கொன்று பலங்கொடை மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணையிலுள்ளமை கணக்காய்வில் வெளிப்பட்டது. தொழிற்சாலையின் விடுதிகளும் கழிவறைகளும் பொருத்தமான பராமரிப்பின்மை காரணமாக சேதமடைந்து வருகின்றன. தொழிற்சாலையின் ரூபா 23,705,431 பெறுமதியான காணிகள், கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் பயன்படுத்தாது விளைவற்றுக் காணப்பட்டன. 2014 பெப்ரவரி 3 ஆந் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் படி, மேற்குறித்த காணி மற்றும் கட்டிடங்களின் சந்தைப் பெறுமதி ரூபா 22,500,000 எனக் கணிப்பிடப்பட்டிருந்தன.

(vii) களுபோவிடியான தேயிலை சக்தி தொழிற்சாலை கம்பனிக்கு 2012 யூன் 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் 25 ஆண்டுகளிற்காக ஹினிதும தேயிலை சக்தி தொழிற்சாலையின் முகாமைத்துவத்தினை மாற்றுவதற்காக இரு தரப்புக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், நிதியத்துக்கு காணி உரித்தாகக் காணப்படாமையால் உடன்படிக்கையின் செல்லுபடியான தன்மை கேள்விக்குரியாக உள்ளமை அவதானிக்கப்பட்டது. மேற்படி கம்பனிக்கு தொழிற்சாலை கையளிக்கப்பட்ட பின்னர் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் கையளிப்பதற்கு முந்திய 5 மாதங்களிற்கான ரூபா 1,187,020 பெறுமானத்தேய்வு மாத்திரம் கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருந்தது. கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 07 மாதங்களிற்கான ரூபா 1,661,829 வருமானம் கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும்,அது தொடர்பான தகவல்கள் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) கனணிகள் மற்றும் மென்பாகங்கள்

------------------------------------------------------------

நிதியத்தின் தலைமை அலுவலகத்தினதும் எல்லாத் தொழிற்சாலைகளினதும் ஒன்றிணைந்த கணக்கினைத் தயாரிப்பதற்காக ரூபா 2,435,000 பெறுமதியான கனணி மென்பாக பொதியொன்று 2010 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அக் கணனி மென்பாக கணக்கீட்டு முறைமையினை உபயோகித்து கணக்கினை தயாரித்தல் 2014 நவம்பர் 30 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. தொழிற்சாலைகளின் கணனிகளின் பெறுமதியினை தொடர்புடைய தொழிற்சாலைகளின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக தலைமை அலுவலகத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

**3.3 இனங்காணப்பட்ட இழப்புகள்**

**--------------------------------------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரஷ்யா இலங்கை கூட்டு உடன்படிக்கையின் கீழ் 2002 ஆம் ஆண்டில் ரஷ்யாவுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்ட தேயிலை இருப்பு தொடர்பில் பெறப்பட வேண்டிய ரூபா 19.9 மில்லியன் தொகை திறைசேரியின் அங்கீகராமின்றி புத்தங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பச்சை இலை உரிமையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட தேவைப்பாடுகளை கருத்திற்கொள்ளாது பசளை இருப்புக்கு கட்டளையிடப்பட்டிருந்தமையால் கொத்மலை மற்றும் மஹாவலி தொழிற்சாலைகளிற்கு நாட்டப்பட்ட பசளைகளை வழங்கியமை காரணமாக முறையே ரூபா 39,248 மற்றும் ரூபா 114,946 நட்டங்கள் ஏற்பட்டிருந்தன.

(இ) பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் உரிய திகதியில் பணிக்கொடையினைச் செலுத்துவதற்கு தவறியமை காரணமாக 2012 ஆம் ஆண்டில் ரூபா 204,934 மிகைவிதிப்பாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளின் படி, தேயிலை பாசறையில் 369 கிலோகிராம் தேயிலையினைக் கொண்ட 1,574 தேயிலை பக்கற்றுக்கள் மற்றும் உள்நாட்டுத் தேயிலை பிரிவில் 509 கிலோகிராம் பீஓபி வகை தேயிலையும் (தேயிலை இருப்பு) காலங்கடந்த தேயிலை இருப்பில் உள்ளடங்கியிருந்தன.

## 3.4 மனித வள முகாமைத்துவம்

-----------------------------------------------

நிதியத்தினால் வழங்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு நிதியத்தின் அங்கீகரித்த பதவியணியினர் 89 ஆக காணப்பட்டதுடன் கூட்டு உடன்படிக்கையின் படி 09 தொழிற்சாலைகளிற்கான அங்கீகரித்த பதவியணியினர் 170 ஆகும். ஓட்டு மொத்தப் பதவியணியில் தலைமை அலுவலகத்தின் 27 பதவிகள் மற்றும் தொழிற்சாலைப் பதவியணியின் 62 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. அது 14 பதவியணி உத்தியோகத்தர்களையும் தொழிற்சாலைப் பிரிவின் 20 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கியிருந்தது.

## 3.5 மோட்டார் வாகனக் கட்டுப்பாடு மற்றும் பராமரித்தல்

-------------------------------------------------------------------------------

கணக்காய்விற்கு கிடைக்கப்படபெற்ற தகவல்களின் படி, நிதியத்தின் 44 மோட்டார் வாகன அணி (டிரக்டர்கள், ரயலர்கள் மற்றும் லொறிகள் உள்ளடங்கலாக) தொடர்பில் பின்வரும் விடயங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் இறுதியிலுள்ளவாறு ஓடக்கூடிய நிலையிலுள்ள அல்லது திருத்தங்களை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு முடியுமான நிலையிலுள்ள மோட்டார் வாகன பட்டோலையில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 14,885,880 பெறுமதியான 23 மோட்டார் வாகனங்களை நிதியத்திற்கு மாற்றுவதற்காக 2014 நவம்பர் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திருத்தவும் பயன்படுத்தவும் முடியாது நிறுவனத்திற்கு உரித்தற்றதாக மோட்டார் வாகன அணியில் உள்ளடங்கியுள்ள தெனியாய, கெப்பிடிபொல மற்றும் கொத்மலை தொழிற்சாலைகளிற்கு உரித்தான ஒன்பது மோட்டார் வாகனங்களை கைதவிர்ப்பதற்கு தவறியிருந்தமை காரணமாக சேதமடைந்துவரும் நிலையில் காணப்பட்டன.

(இ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு நிலையான சொத்துக்கள் பட்டோலையில் பலங்கொட, மஹாவலி, மாவரல மற்றும் ரைகம் கோரலை தொழிற்சாலைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள டிரக்டர்கள், ரெய்லர்கள், லொறிகள் மற்றும் உழவு இயந்திரங்களை உள்ளடக்கிய ரூபா 2,862,921 பெறுமதியான ஒன்பது வாகனங்கள் மோட்டார் வாகன அணியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

-----------------------------------------------------------------------

### 4.1 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம்

---------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய பீ.ஈ.டீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5:1:2 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டிய நிலவும் வளங்கள், ஒழுங்கமைப்பு வரைபடம், மீளாய்வாண்டுக் காலப்பகுதிக்கான தந்துரோபாய திட்டங்கள், திட்டமிட்ட காலப்பகுதியில் அடையப்படவுள்ள நோக்கங்கள் மற்றும் இலக்குகளை தெளிவாக குறிப்பிட்டு அந்தந்த முகாமையாளர்களிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் போன்றவற்றை 2008-2012 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டம் கொண்டிருக்கவில்லை.

**(ஆ) கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலாபத்தன்மை இலக்கினை அனுகியிருக்காமை**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

நிதியத்தின் பங்குதாரர்களின் பொருளாதார நலனை அதிகரிப்பதற்காக வருடாந்தம் தொழிற்சாலைகளிலிருந்து கிடைக்கும் இலாபத்தினை 2012 இல் ரூபா 150 மில்லியன் வரை அதிகரித்துக் கொள்வதற்கும் உள்நாட்டு தேயிலைப் பிரிவிலிருந்து கிடைக்கும் தேறிய இலாபத்தினை வருடாந்தம் ரூபா 1 மில்லியனால் அதிகரித்துக் கொள்வதற்கும் இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 2009 ஆம் ஆண்டு முதல் தொழிற்சாலைகளின் இலாபம் ஆண்டுக்காண்டு குறைந்து வருவதுடன் உள்நாட்டு தேயிலைப் பிரிவு 2006 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நட்டத்தில் இயங்கி வருகின்றது.

‘‘அங்கத்துவ பங்குதாரர்களின் பங்கு மூலதன பெறுமதியை அதிகரிப்பதன் மூலம் தேயிலை சிறு உடமையாளர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் சமூக அந்தஸ்திற்கும் அர்ப்பணிப்புள்ள மிகச்சிறந்த நிறுவனமாக உருவாதல்’’ நிதியத்தின் தூர நோக்காக காணப்படுகின்ற போதிலும், மேற்குறித்த விடயங்களின் படி நிதியம் குறிக்கோளை அடைந்திருக்காமையினைக் காட்டுகின்றது. கடந்த 5 ஆண்டுகளில் நிதியத்தின் அங்கத்தவர்கள் எந்தவொரு நலனையும் பெற்றிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டில் இறுதியிலுள்ளவாறு ரூபா 1,078,910 பெறுமதியான 107,891 பங்குகளை பங்குதாரர்கள் கைமாற்றியிருந்தனர்.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

**--------------------------------**

நிதியத்தின் பாதீட்டின் படி, பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான விடயங்களிற்கிடையே குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

**--------------------------------------------------------**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) காசுக் கட்டுப்பாடு

(இ) தொழிற்சாலைகளை செயற்படுத்தல்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) இருப்புக் கட்டுப்பாடு